**நிலைபேறான அபிவிருத்தி சபை - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நிலைபேறான அபிவிருத்திச் சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மாற்றத்திலான கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, சபையின் நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் மற்றும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்படு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது சபையினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், சபையினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வுநியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்து நிலைத்திருந்தல் தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதாக என்பது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள

ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் நிறுவகத்தின்தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் சபையின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாகஇ

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

| **உரிய நியமங்களுடனான தொடர்புடன் கூடிய இணங்காமை** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பத்தி 69 க்கு முரணாக, சபையின் கணக்கீட்டு கொள்கை 1.3 (b) இன் கீழ் "சொத்துக்கள் கொள்வனவு செய்யும் | எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களை சரியாக பின்பற்றுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டில் பெறுமான தேய்மானம் செய்ய வேண்டாம்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. | | |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 69 ஆம் பத்தி பிரகாரம் 2021 ஆம் ஆண்டில் சரியாகக் கணக்கீடு செய்திருந்த ரூபா 136,605 ஆன பெறுமான தேய்வுப் பெறுமதியானது நடைமுறை ஆண்டில் தவறு சரி செய்வதாக மீண்டும் செம்மையாக்கப்பட்டதன் காரணமாக பெறுமான தேய்வுப் பெறுமதி குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்கால நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களை சரியாக பின்பற்றுவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பொருட் பதிவேட்டின் பிரகாரம் 10 உருப்படிகளை கொரோனா தடுப்புக்கான தேசிய நடவடிக்கை மையத்தினால் எடுத்துச் செல்லப்பட்டிருந்த போதும், தொடர்ந்தும் அவை சொத்தாக காண்பிக்கப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிரயம் ரூபா 5,664,017 ஆன ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்களின் பௌதீக ரீதியான இருப்பை உறுதிப்படித்திக் கொள்ள வருடாந்த பொருட் கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை . | இது தொடர்பில் கவனம் செலுத்துமாறு கணக்காளருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. கொரோனா் தடுப்புக்கான தேசிய நடவடிக்கை நிலையத்தினால் எடுத்துச் செல்லப்பட்டிருந்த 10 உருப்டிகள் தொடர்பாக ,இலங்கை பொலிஸில் முறைப்பாடு செய்ய நடவடிக்கை எடுத்ததுடன் முறைப்பாடு தொடர்பில் பின் தொடர் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது. விரைவில் அலுவலகத்தை புதிய இடத்துக்கு மாற்ற வேண்டியதன் தேவை ஏற்பட்டதன் காரணமாக 2023 ஆண்டு பொருட் கணிப்பீடு நடவடிக்கைகளை மேற்கொள்வது சற்று தாமதமானது. | சொத்துக்களின் பௌதீக இருப்பையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.6 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் நிதித் தேவைபாடு தொடர்பாக போதிய மதிப்பீடின்றி பொது திறைசேரியிலிருந்து நிதி பெற்றுக் கொள்வதால், ரூபா | இது தொடரபாக நடவடிக்கை எடுக்க கணக்காளருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. | நிதித் தேவை தொடர்பாக போதிய மதிப்பீட்டின் பின்னர் திறைசேரியிலிருந்து |

| | | |
|---|---|---|
| 12 மில்லியனிற்கு அதிக பண மீதி அதாவது மொத்த பெறுவனவுகளில் 52 சதவீத மீதியொன்று நடைமுறை கணக்கில் விளைவற்று பேணிச்செல்லப்பட்டிருந்தது. | | நிதி கோர வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 531,098 ஆன மிகையாக காணப்பட்டதுடன் அதனோடு ஒத்த கடந்த ஆண்டின் மிகை ரூபா 5,689,191 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 5,158,093 ஆன வீழ்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. இவ் வீழ்ச்சிற்கு நிருவாக செலவினம் 44 சதவீதத்தினால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆண்டின் 19 ஆம் இலக்க இலங்கை நிலையான அபிவிருத்திச் சட்டத்தின் 10 (ஆ) பிரிவின் பிரகாரம் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் மற்றும் ஒன்பது மாகாண சபையினையும் விசாரித்து மற்றும் அவற்றின் இணக்கப்பாட்டுடன் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கைகள் மற்றும் மூலோபாயங்களை தயாரித்து அங்கீகாரத்திற்காக் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் 2019 செப்டம்பர் மாதம் முதல் செயற்படும் இச் சபை அறிக்கையின் திகதி வரை 4 ஆண்டுகளிற்கு அதிக காலம் சென்றிருந்த போதும் இதுவரை அங்கீகாரத்திற்காக அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிலையான அபிவிருத்தி தொடர்பான தேசிய வழிநடத்தல் குழுவொன்றை பிரதமர் தலைமையில் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிலையான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள் மூலம் அடையப்பட வேண்டிய முடிவுகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களை ஒருங்கிணைப்பதற்கு மற்றும் நிறுவனங்களில் எழுகின்ற தேவைப்பாடுகளுக்கு ஏற்ப அந்தந்த விடயப் பரப்பு தொடர்பான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை உள்ளடக்குவதற்கு தேவையான ஒருங்கிணையினை சபை ஊடாக தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுகின்றது.<br>2024 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்திற்கான நிதி அமைச்சின் சுற்றறிக்கையினுள் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் வரவு செலவுத் திட்டக் குறியீட்டு மற்றும் லேபிள் இடல் உள்ளடக்க நடவடிக்கை எடுத்தல். | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கை மற்றும் மூலோபாயம் தயாரிக்கப்பட்டு அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு விரைவில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |